வாரீர்! வகுத்த வழி நடப்போம்!

மாவீரர் ஸ்டாலின் மறைந்துவிட்டார் — மனிதகுல மாணிக்கம் மறைந்து விட்டது. வரலாறு கண்ணீரால் எழுதப்படுகிறது — வாழ்வளித்த வீரத்தலைவன், மறைந்து போனான். வையகமெங்கும், தேம்புகிறார்கள் — தலைநகர்களிலே தத்தமது கொடியினைத் தாழப்பறக்கவிட்டு, மரியாதை செலுத்தினர் அவர் மரணம் கேட்டு.

அரை நூற்றாண்டுக்காலம் அரும்பாடுபட்டு, அவனியோர் கண்டு ஆச்சரியப்படும்படியான ஆற்றல் காட்டி, அரிய பெரிய வெற்றியைச் சாதித்த அஞ்சாநெஞ்சன், அடலேறு, சமதர்மச் செம்மல், ஸ்டாலின் மறைந்துவிட்டார். கண்ணீரைக் காணிக்கையாக்கித் தருகிறார்கள் உலகோர்.

*

ஒப்பற்ற தலைவர் — உலகிற்கு ஓர் உத்தமமான வழியைக் காட்டிய தலைவர் — மறைந்து போனார் — உலகு திகைத்துக்கிடக்கிறது.

*

உலகம் ஓர் இலட்சிய புருஷனை இழந்துவிட்டது — ஈடு செய்யமுடியாத பெருநஷ்டம் — இணையற்ற செல்வத்தை இழந்துவிட்டது உலகு — திக்கற்றோம் என்று திகைக்கிறது உலகம்.

*

ஸ்டாலின்! மருண்டனர் மமதையாளர்கள் இந்தச் சொல்கேட்டு! இருண்டது நம் வாழ்வு என்று இன்று ஏழையர் உலகம் ஏங்குகிறது அவர் மறைவு கேட்டு.

*

ஸ்டாலின்! சூதுமதியினரும், சுகபோகிகளும், நடு நடுங்கினர் இந்தச் சொல்கேட்டு — இன்று, அந்தோ! எம்மைவிட்டுப் பிரிந்தாயோ எம் தலைவா! என்று பாட்டாளி மக்கள் பதறிக் கதறுகின்றனர், அவர் மறைவு கேட்டு.

*

களம் பல கண்ட காவலன் — படை பல வென்று தடைபலதாண்டி, வெற்றிக் கோட்டத்தில் வீரக் கொடியினை ஏற்றிவைத்த தீரன் — ஸ்டாலின் — மறைந்து விட்டார். அவர் சடலத்தின் பின்னே, சோக உருவங்கள், வழியும் கண்ணீரையும் துடைக்கும் நிலையற்று, ஊர்ந்து செல்கின்றன.

*



பாடுக பரணி! தரணி உமக்கே சொந்தம், தருக்கருக்கு அல்ல! சீறிடும் சிட்டு, வல்லூறை வீழ்த்த இயலும், கூப்பிய கரத்தினரே! குமுறும் நெஞ்சத்தினரே! அழுதது போதும், இனிச் செயல் புரிய வாரீர்! திகைத்தது போதும், திரண்டெழுந்து பாய்வீர்! — என்று வீர முழக்கமிட்டு எந்த மாவீரன் ரஷ்ய மக்களை வெற்றிப் பாதையிலே அழைத்துச் சென்றானோ, அந்த மாவீரனுடைய சவ ஊர்வலம் நடைபெறுகிறது — நெஞ்சம் அனலிடு புழுவெனத்தானே ஆகிவிடும்.

*

ஸ்டாலின்! அந்தச் சொல் ஒரு தத்துவ விளக்கம்! ஒரு போர்முறை! ஓர் செயல் திறன்! ஓர் கலங்கரை விளக்கு! ஏழைகளுக்கு, நம்பிக்கை! எத்தர்களுக்கு, எச்சரிக்கை! சுயநலமிகளின் கருத்தைக் குழப்பும் கேள்விக்குறி! ஏழை மக்கள், கண்டு களிக்கும் ஆச்சரியக்குறி! ஸ்டாலின்! ஒரு தனி நபரின் பெயரா அது! இல்லை, இல்லை, உலக வரலாற்றிலே ஓர் பெரிய அத்யாயம்! அந்த அத்யாயம் முடிந்துவிட்டது — கண்ணீரால் எழுதப்படுகிறது, மாவீரன் ஸ்டாலின் மறைந்தார் என்று.

*

அரசுகள் அமைத்த ஆற்றல் மிக்கவர்களின் பெயர்ப் பட்டியல் தான் வரலாறு. சென்றேன், கண்டேன், வென்றேன், என்று முழக்க மிட்ட ரோம்நாட்டு ரணகளச்சூரன் ஜூலியஸ் சீசர் போன்றவர்களின் பெயர் தீட்டப்பட்டிருக்கும் சுவடி, வரலாறு! அதுபோலவே அரசு அமைதிக்கும் வழிகோலுவதாய், அனைவரையும் வாழவைப்பதாய், எவருக்கும் எக்கெடுதியும் இல்லாத இன்பம் தருவதாய் அமைதல் வேண்டும் என்ற நல்ல எண்ணம் கொண்டு, சிந்தித்துச் சிந்தித்து சீரிய கருத்துகளைத் தந்து சென்றவர்களின் பெயர்களும் தீட்டப்பட்டிருக்கிறது, வரலாற்றுச் சுவடியில்! கூர்வாள் கொண்டோன், கூர்த்தமதி படைத்தோன் — இவர்களின் உழைப்பால் உருவாக்கப்படும் காலம் — இது வரலாறு தரும் பாடம்! என் அரசு! என் முரசு! — என்று முழக்கிய வீரர் பலர்! என் அரசு! நல்லரசு! — என்று கூறியவர் சிலர்! வீரர் பலப்பலர்! விவேகிகள் சிலர்! இவர்களுக்கிடையே கோடானுகோடி மக்கள்! என் நாடு! இதை எதிர்ப்பவன் எவனுண்டு! யார் எனக்கு ஈடு? — என்று முழக்கமிடும் வீரர் — தன்னாடு, தன் நாடு, என்று யார் தட்டினர் எனினும், அதனைக் காத்திடத் தோள் தட்டி நின்றனர் எனினும், தன் நாடு, யாருக்கு வாழ்வளிக்கிறது, யாருக்கு வாட்டம் அளிக்கிறது, என்பது பற்றி அதிகம் எண்ணவோ, சிற்சில வேளைகளில் எண்ணினாலும் திருத்த முறைகளைப் புகுத்தவோ தெளிவும் திறனுமற்றுப்போய், கொட்டு முரசு! கொட்டு முரசு! என்று கூவிக்கிடந்தனர் — ஒட்டிய வயிற்றினர், உலுத்தர்களின் கொடுமைக்கு ஆளாகி, வாழ்வு எட்டி, சாவே, கரும்பு என்று கதறிக் கிடந்தனர். வரலாறு இதனைக் காட்டுகிறது. ஏழையும் வாழத்தான் வேண்டும் — வாழ்வு அனைவருக்கும் உள்ள உரிமை — அதைப் பறிப்பது கொடுமை — அந்தக் கொடுமையை நீக்காதிருப்பது மடைமை — என்று எண்ணிய நுண்ணறிவாளர்கள், சிலர், உண்மையை உரைத்தனர், அரசுகளை அறநெறி செல்லப் பணித்தனர், அறிநெறியினரை அரசோச்ச அழைத்தனர், புதிய முறைகளைத் தீட்டிக்காட்டினர், தித்திக்கும் தத்துவங்களைத் தந்தனர் — கொடுமைக்கு ஆளான ஏழையின் மனதிலே ஓர் இன்ப அரிப்பும் ஏற்பட்டுவிட்டது — எனினும், அவனுக்கு வாழ்வளிக்கும் வழிகாண 'மேதை'களால் முடியவில்லை. என் நாடு! என் நாடு! என்றும் இதை எதிர்க்கும் நாடு, சுடுகாடு என்றும் முழக்கமிட்ட சீசர்கள் — வீரர்கள் பலர் — இந்நாடு, பொன்நாடு ஆகல் வேண்டும் — பாரெல்லாம் வாழ வேண்டும், பாழ்நிலை ஒழிய வேண்டும் என்று பண்ணிசைத்த விவேகிகள் சிலர் — வரலாற்றுச்சுவடியில் — ஆனால் ஒரே ஒரு முறை, ஒப்பற்ற சம்பவம் காட்டுகிறது தீட்டுகிறது வரலாறு, வீரமும் விவேகமும் ஒரு சேர நின்று, உருவளித்ததை — அந்தச் சம்பவம் — அந்தச் சகாப்தம் — லெனின் — ஸ்டாலின்' சகாப்தம். அந்த சகாப்தத்தில் அரை நூற்றாண்டுக்காலம், ஸ்டாலினிடம் ஒப்படைக்கப் பட்டது, ஒப்பற்ற வெற்றி கண்டார் — ஓயாத உழைப்பைக் கொட்டினார், திறன் அவ்வளவும் செலவிட்டார், — அப்படிப்பட்ட வரலாறு முடிவடைகிறது — மாவீரன் மறைந்து விட்டார் — மனிதகுலம் மனமுருகி அழுகிறது!

*

ஸ்டாலின்! அவர் பெயர் அறியாப் பாட்டாளி இல்லை! அவர் புகழ் பேசப்படாத இடம் இல்லை! அவர் இலட்சியம் பரவாத மண்டலம் இல்லை! அவரை நேரில் காணாதவர்கள் கோடி கோடி — ஆனால் அவர் காட்டும் வழியே நல்வழி என்று கொள்பவர்கள், அவர்கள் எல்லாரும். தொலை தூரத்து விளக்கு — புகழொளியோ, ஏழையின் இல்லங்களிலெல்லாம், கடல்கடந்து, காடு கடந்து, மலைகடந்து மமதையாளரின் தடை கடந்து, பரவிற்று, பரவிக்கொண்டே இருக்கிறது — பரவ விடக்கூடாது என்று தடைமுறை அதிகரிக்க அதிகரிக்க, புகழொளி மேலும் மேலும் வேகமாகப் பரவுதல் கண்டோம். அந்தப் புகழொளி பரப்பிய பொன்னவிர்மேனியன், உயிர்நீத்தார், உடலத்தைக் கண்ணாடிப் பேழையிலிட்டுக் காட்சிப் பொருளாக்கி விடுகிறார்கள் — கண்ணீர் விடாமலிருக்க எந்தக் கல்நெஞ்சனாலும் முடியாதே!

*

மாஸ்கோவில் ஸ்டாலின் — இங்கே மரத்தடியில் படுத்துப் புரளும் மாடனும், கழனியிலே மாடாய் உழைக்கும் வேலனும், ஆலையிலே வேகும் கந்தனும், ஐயோ! அடுத்த வேளைக்கு உணவுக்கு எங்கே செல்வேன் என்று அலறும் ஆறுமுகமும், பஞ்சையும் பராரியும், பாட்டாளியும் தோட்டத் தொழிலாளியும், நமக்கு ஓர் தலைவர் இருக்கிறார், எம் வாழ

(4-ம் பக்கம் பார்க்க)

திராவிடநாடு

மலர் 11 | 8—3—53

விலை 2 அணா

அணையா விளக்கு

[அரங்கண்ணல்]

பத்துமைல்!

ஒருவர் பின்னொருவராக, வரிசை குலையாமல், மக்கள் வெள்ளம்.

தேம்புகிறார்கள்! திகைக்கிறார்கள்! நகர்ந்தவண்ணம் இருக்கிறார்கள்!

"தம்பி! பார்! பாப்பா, பார்!" என்று, கண்களில் வழியும் நீரைத் துடைத்தபடி, சுட்டிக் காட்டுகிறார்கள்—தாய்மார்கள்.

செஞ்சதுக்கம்—மக்களின் கண்ணீரால், கழுவப்பட்டுக் கொண்டிருக்கிறது.

மாணவர்கள் கதறுகிறார்கள்! வாலிபர்கள் ஒன்றும் புரியாதாய்—ஒருவரையொருவர் பார்ப்பதும்—தேம்புவதுமாய்த் திரிகிறார்கள்.

அழுகுவழியும் மாஸ்கோ நகரத்து வீதிகளிலே, 'ஐயோ' என்ற ஓலம்! அமைதி தவழ்ந்து கிடந்த அரசாங்க மாளிகையாம் கிரெம்லின், கண்டிருக்க முடியாத அளவு, கண்ணீர். ரஷ்யமண், மக்களின் கண்களிலிருந்து வழியும் அருவியால், கழுவப்பட்டுக் கொண்டிருக்கிறது! அவலம்! அவலம்!! எங்கும் அவலம்!!!

அரசியல் விற்பன்னர்கள் — புது உலகைக் கட்டிக் காக்கும் ஞானாதிவுமிக்கோர் — அஞ்சா நெஞ்சம் படைத்த ஆராய்ச்சி வல்லுநர் — விஞ்ஞான மேதைகள் — விசாரம் அறியா விவசாயிகள் — சோகம் தெரிய முடியாத வாழ்வில் திளைக்கும் தொழிலாளர்கள் — இரத்தம் ஆறாக ஓடிய போதும் கலங்காத ரணகளச்சூரர்கள்—"இரண்டு கோடி மக்களை இழந்தோம்—கடந்த போரில் எனினும், மானத்தை இழந்தோமில்லை! இரண்டு கோடி! பாசிசக் கொடுமையை ஒழிக்க இரண்டுகோடி உயிர்களின் ரத்தம்!!" என்று, வீராவேசத்தோடு பேசிடும் வெற்றி வீரர்கள்—வீரத் தளபதிகள் — குழந்தை, கிழவி, வயது முதிர்ந்தோர், வாலிபப்பட்டாளம், சிரம் தாழ்த்தி, ஒருவர் பின்னொருவராக, பத்துமைல் தூரத்துக்கு நின்றபடி, அசைந்து அசைந்து செல்கின்றனர் — சிதைந்த வீரன் வைக்கப்பட்டிருக்கும் இடத்துக்கு!

கண்ணீர் தேங்குகிறது, கண்களில்! தேம்புகின்றனர்! "தலைவா, இதுவோ எம் நிலை!" என்று தலை வணங்குகின்றனர்! சிரம் தாழ்த்தி யறியா, தீரர்கள்—அவர்கள். சிரம் தாழ்த்தா வாழ்வைத் தமக்களித்து, முப்பத்து எட்டு ஆண்டுகள் உழைத்து, தம் மூச்சோடு மூச்சாய், குடும்பத்தோடு குடும்பமாய், கலந்து விட்ட தலைவனின், தலை சாய்ந்ததைத் தாங்கமுடியவில்லை, அவர்களால். ஏக்கம் நிரம்பிய விழிகள்! துக்கம் தோய்ந்த உள்ளம்!!—ஏறிட்டுப் பார்க்கின்றனர்.

தோழர்களிடம் கனிவும், துரோகிகளைக் கண்டால் கனலும் பறக்கக்கண்ட, கண்கள் திறந்தில்லை! மூடிவிட்டன.

புன்சிரிப்புக்குத் திரைபோடுவது போலிருந்தாலும், உள்ளத்து வீரத்தை உதட்டிலே காட்டுவது போல் விளங்கிய, அழகான மீசைகள். ஆடவில்லை! அசையவில்லை!!

கனிவான சொல்லால் 'காம்ரேட்ஸ்' என்றழைத்த வாய் மூடி, விட்டது! ஊர்வலம் வந்தால் உயர்த்தியபடி, மக்களை வணங்கிய, கரம்—கிடக்கிறது, மரத்துண்டுபோல! "இதோ! ஹிட்லரின் படைகள். அதோ, ஜப்பானிய விமானங்கள். லெனின் கிராட் போய்விடும்போலிருக்கிறது துப்பாக்கிகள் துளைக்கின்றன! இத்தாலியர் வேறு சீறுகிறார்கள். பாசிசப்பேயினர் வெறியாட்டம் தாங்கவில்லை! ஐயோ, ரஷ்யாவே — அருமைத்தாயகமே — என்னாகும் எம் கதி?" என்று கலங்கிய தோழர்களைப் பார்த்து, "கலங்காதீர்! நாம் கட்டிய கோட்டை, இது காற்றுக்கோ, வீழ்ந்துவிடும்? கரத்தில் வலிவும், இதயத்தில் உறுதியும். கண்களிலே ஒளியும், உடலில் இரத்தமும் உள்ளவரை, நம்மை வீழ்த்த முடியாது, எவராலும். வீரர்காள்! என்னரும் தோழர்காள்!! எங்கே விமானப்படை— கிளம்பட்டும் தரைப்படை—பீரங்கிகள் தயாராகட்டும் — ஆலைகள் ஓயாது ஓடட்டும்........" என்று சிங்கம்போல் கர்சித்ததீரன்; "செய்வது தெரியவில்லை, மார்ஷல்! பிரான்சு, சீறுகிறது. பிரிட்டன், மிரட்டுகிறது. அமெரிக்கக் கழுகு, சமயம் பார்க்கிறது. ஜெர்மனி, சிங்கநாதம் செய்கிறது. போலந்து துள்ளுகிறது. ஹாலந்தும் பின்லந்தும், பலப்பல சொல்லுகின்றன. எங்கும் எதிரிகள், நமக்கு! எப்பக்கம் நோக்கினும் முதலாளித்துவக் கும்பல்! — என்ன செய்யப் போகிறோமோ?" என்று. கலங்கிய, தோழர்களை, கண்ணிலே பிறக்கும் புது ஒளியைக் காட்டி, நாட்டிலே தவழும் இன்ப நிலையைக் காட்டி, 'ஏனிந்த அச்சம்! இருக்கின்றார், இருபதுகோடி மக்கள் எனில் அவரெல்லாம் வீரர் தாம், பொதுவுடைமை பூக்கச்செய்தோம்—புல்லர்தம் கெடுமதிக்கு அதனை இழக்கவா, விடுவோம்! ஒருநாளுமில்லை—எழுவீர்! இருபதுகோடி மக்களே, ரஷ்யா—அஞ்சேல்! அஞ்சேல்!!" என்று அபயம்தந்த அஞ்சா நெஞ்சினன், திண்தோள் வீரன், செயற்கரிய செய்த சிங்கம், மலைகுலைந்தாலும் மனம் குலையா மாண்பினன், மக்களின் தோழன், மமதை அறியா மணிச்சுடர், ரஷ்யாவின் 'இதயம்', உலகத்தின் நண்பன், உயிரில்லா பிணமாகக்கிடக்கிறார்! உடல், உயிரில்லாத வெறும் உடல்!! —அசையாமல் கிடக்கிறது, ஆடாமல் கிடக்கிறது—ஐயகோ, எப்படிச் சகிக்கமுடியும், இதனை?

ஸ்டாலின்—சாதாரணப் பெயரா இது—ஐம்பத்தெட்டு ஆண்டுகள் மக்களுக்காகப் பாடுபட்ட உருவமன்றோ, அது—பதினைந்தாம்வயது முதல் பாட்டாளிகளின் வாழ்வுக்காக வாழ்வை ஒப்படைத்து—உழைத்து — வெற்றிகண்ட உருவன்றோ, அது—இருட்டிலே இன்ப ஒளி எழச்செய்த பொது வாழ்வுச் சுடர் அன்றோ அது—அந்தப் பொன்னொளி, அணைந்துகிடப்பதென்றால், அந்த அந்தகாரத்தை எப்படிச் சகிக்கமுடியும்! காட்டையும் மேட்டையும் பதப்படுத்தி, பாம்பும் புலியும் உலவிய இடத்தில் பச்சைப் பசேலென்ற நந்தவனத்தை ஆக்கித் தந்த ஒரு அருமைத் தந்தை—ஆசைத் தலைவன் — ஆருயிர் அண்ணன்—அருமையான தளபதி—அஞ்சா நெஞ்சமும் அதே நேரத்தில் இளகிய உள்ளமும் படைத்த 'குழந்தை,–குடும்பச் செல்வம்—கோலாகலமாகப் பவனி வந்து, உலகத்தோரில் உண்மையானோர் வாழ்த்த, உடம்பில் அத்தரும், உள்ளத்தில் அபினியும் போட்டுவாழும் உன்மத்தர் மிரள, "வாழ்க ஸ்டாலின்! வாழ்க மாவீரர்!!" என்று வாழ்த்தொலிமுழக்க, வலம்வந்த ஒரு புதுயுகத்தலைவனை, சமாதியில் காண்பதென்றால், சகிக்கமுடியுமா, அதனை? கதறுகின்றார்கள்! ரஷ்ய மக்கள் கதறுகின்றார்கள், தமது 'தந்தை' போய்விட்டார் என—உலக மக்கள் கதறுகின்றார்கள்! 'உத்தமத் தோழரை' இழந்தோமென்று—ஏழையர் உலகம் ஏக்கத்தோடு மூச்சு விடுகிறது! தமக்கு இரத்தம்—சதை—நரம்பு—உயிர் எல்லாமாகவும் இருந்த ஒருவரை இழந்துவிட்டோமென்று. ஸ்டாலின்—ரஷ்யாவுக்குப் பிரதமர் — ஆனால் உலகுக்கு ஓர் வழிகாட்டி! அவர், போய்விட்டார் — 73-வயதோடு, அவரது மூச்சு, போய்விட்டது.

மக்களுக்காக உழைத்து உயிர் துறந்த உத்தமர்களின், சாவுகள், அறிவோம் நாம். அவர்கள் மறையும்போது, அவர்களால் நன்மைகள் பெற்ற நாட்டினர் அழுவதும், கண்ணீர் வடிப்பதும் சகஜம். அத்தகைய 'உத்தமர்'களைப் பற்றி, வெளி நாட்டுத் தலைவர்களும்—அரசியல் வாதிகளும்—அனுதாபச் செய்திகள் அனுப்புவதும், ஆழ்ந்த துக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுவதும் சகஜம். ஆனால், மாவீரன் ஸ்டாலின் மறைந்தார் என்ற செய்தி கேட்டதும், ரஷ்ய மக்கள் மட்டுமல்ல கதறுவது, உலகத்து அரசியல் வாதிகள் மட்டுமல்ல துயரச் செய்தி அனுப்புவது—குமரி முனையில் வலைவீசி வாழும் பரதவ குலத் தோழன் முதல் மலேயாக் காடுகளில் உழலும், உழைப்பவன் உட்பட, எங்கெங்கு வாழமுடியாதோர் இருக்கின்றனரோ, அவரெல்லாம் வருந்துகின்றனர். தாயை இழந்த கன்றுபோல, வாழமுடியாதோரை வாழவைக்கும் திருத்தொண்டலீடுபட்ட புதுமை விரும்பிகள், துடிக்கிறார்கள்.

எட்டமுடியாத, பெருமை! எப்படிப் பெற்றார், ஸ்டாலின்?

சராசரி மனிதராகத்தான் பிறந்தார் — சராசரி மனித வாழ்வைவிட மட்டமான வாழ்வில் உழன்ற சக்கிலியர் குடும்பம் ஒன்றில்தான், பிறந்தார். ஏழடுக்கு மாடியில், இரத்தின கம்பளம் விரிக்கப்பட்ட கட்டிலில், ஏராளமான தாதியர் காத்திருக்க, அல்ல, அவர் பிறந்தது. ஒரு ஏழையின், இல்லில்! எனினும், அவர், எவ்விதம் எல்லோரது இதயத்திலும் புக முடிந்தது? டில்லிப் பாராளு மன்றத்தில் பேசிய பண்டித நேரு அவர்கள் கூறினராம்—'ஸ்டாலின் ஒரு சகாப்தத்தைத் துவக்கிவைத்தார். அவரோடு, ஒரு சகாப்தம் முடிந்தது, அவரே, ஒரு சகாப்தம்தான்' என்று. ஆழ்ந்த உண்மையை, அவர், வெளியிட்டிருக்கிறார். அந்த உண்மையைத் தவறென்போர், இருக்கலாம்—மறைந்த மாவீரனிடம் மாசுகள் இருந்ததில்லையோ? என்று வாதிடவரலாம். ஆனால், அவை 'சூது' மதியினரின் செயலாக இருக்க முடியுமே தவிர, மாவீரன் ஸ்டாலின், ஒரு சகாப்தத்தின் தந்தை என்பதை எவரும் மறுத்திட முடியாது. அவர் புதுவழி கண்டவர்—புதுவழி சென்றவர் — புதுவழியில் வென்றவர். இந்த உண்மையினை, எவரும், ஏளனப் படுத்தவோ, அலட்சியம் செய்யவோ முடியாது. யுகயுகாண்டுளாய், மனித சமுதாயத்தைப் பிடித்துக்கிடந்த ஒரு தொத்து நோயை ஒழிக்க, வழி கண்டவர்களுள், அவரும் ஒருவர். ஆனால், அதை வெற்றியடையச் செய்த பெருமை முழுதுக்கும் அவரே, அருகதையுடையவர்.

மனிதனுக்கு மனிதன் பேதமேன்?

ஒருவன் வாழ, பலர் வாடவுமான நிலையேன்?

—இதுபோன்ற, கேள்விகளைப் பலர், பல ரூபத்தில் கேட்டிருக்கிறார்கள். 'அது அவரவர் வந்த வழி!' 'ஆண்டவன் இட்ட கட்டளை இது' 'பரமண்டலத்துக் கர்த்தரின் விருப்பம் அது', 'தலைவிதி'–இதுபோலப் பலப்பல கூறப்பட்டு, இந்த பிரச்சினைக்கு முடிவு கட்டாமல், புதுப் புதுப் பிரச்சினைகள் முளைக்கவிட்டார்களே தவிர, எவரும் சரியான வழியினைச் சொல்லவில்லை ஆனால், 'மனிதன் மனிதனுக வாழும் வழி'யைக் கண்டு சொன்ன பெருமை, ஸ்டாலினின் குருநாதர்களான, மார்க்ஸ்—எங்கெல்ஸ் — லெனின் முதலிய மாவீரர்களையே சாரும். வழிசொன்னார்கள், மார்க்ஸும் எங்கெல்சும்! வழியில் நடக்க முயன்றார்கள், லெனினும் ஸ்டாலினும்! வெற்றியைக் கண்டார், லெனின்! ஆனால், அதுதந்த ஆனந்தத்தை அறுவடை செய்து, அந்த இன்பத்தை எதிர் நோக்கி வந்த இடையூறுகளையெல்லாம் தவிர்த்து, தனிப்புகழ் பெற்றவர், ஸ்டாலின் அவர்களே, ஆவார்கள். அதனால்தான் அவரது பெயர் 'இல்லாதவனின்' இதயங்களிலெல்லாம், ஒலிக்கிறது. இதனையே, பண்டிதர், சுட்டிக்காட்டியிருக்கிறார். இந்தச் சாதனையென்ன, சாமான்யமானதா! இதற்காகப்பட்ட கஷ்டங்கள்தான் இலேசானவையா! சுற்றிலும் புலியும் ஓநாயும், கழுகும் காண்டாமிருகங்களும், எப்பொழுது சமயம் வாய்க்கும்? எப்பொழுது வேட்டையாடலாம்? என்று, நாவில் நீர்சொட்டக் காத்திருக்க, இந்த இக்கட்டான சூழ்நிலைகளுக்கும் மத்தியில், 'பசுவொன்றை' வளர்த்து—பால்கறந்து 'பருகுக—பருகுக' என்று அளிக்கும் செயல், சிறியதோர் காரியமா? எளிதில் செய்து முடிக்கத்தான் கூடியதா! பாலைவனத்துக்கு மத்தியில் பசுஞ்சோலை அமைத்தார்! முள்ளுக் காட்டிலே ரோஜாவை வளர்த்தார்!!—இதனாலேயே அவரை 'மாவீரர்' என்றோம், மகிழ்ந்தோம். இன்று, மறைந்தாரென அறிந்தும் துயருறுகிறோம்—துடிக்கிறோம்.

ரஷ்யாவைச் சுற்றிலும், முதலாளித்துவம் முரசு கொட்டிடும் நிலை. எனினும், முதுகு காட்டினரில்லை! பெருமிதமாக 'பொதுவுடைமை'ச் செடியைப் பயிரிட்டார் — வளர்த்தார்—மலர் அரும்பச்செய்தார்.

இத்தகையதோர், நற்பணியினை, இதுவரையில் எவருமே — செய்ததில்லை! அடிமைச் சங்கிலியை அறுத்தெறியப் பாடுபட்டோர் உண்டு, கிரீடதாரிகளின் 'சித்தாப்புகளை' தரையிலே உருளச்செய்த தீரர்கள் உண்டு, 'விடுதலை! சுதந்திரம்!' என வெற்றி முழக்கம் செய்த வீரர்களும், உலக வரலாற்றில் உண்டு. ஆனால், அவர்கள் அத்தனைபேரையும், மிஞ்சிவிட்டார், ஸ்டாலின். சாக்கடையைத் தூர்த்ததோடு, போய்விடவில்லை சந்தனக் காட்டினையும் பயிரிட்டார்!!

ஜார் காலத்து ரஷ்யாவை நாம் அறிவோம். மதவாதிகளும் நிலப்பிரபுக்களும், மூடநம்பிக்கையும், பித்து விளையாட்டும், மக்களை ஆட்டிவைத்த விபரங்களையும் அறிவோம். அத்தகைய ஓர் பூமியில் ஆனந்த வாழ்வை, உண்டாக்கியவர், ஸ்டாலின்.

*

பதினெட்டாம் நூற்றுண்டின் மத்தியகாலம்! ஐரோப்பிய நாடுகளிலெல்லாம் இயந்திர முறை கண்டுபிடிக்கப்பட்டு, தொழில் ஆதிபத்யம் உருவாகிக்கொண்டிருந்த வேளை. ரஷ்யாவோ, பழைய நிலையிலேயே இருந்துகொண்டிருந்தது! கழனியை நம்பியவனும், காட்டுமிராண்டி முறைகளில் வாழ்க்கையை ஓட்டிவிட்டுக்கொண்டிருந்தவனும், வசித்துக்கிடந்தநேரம். மக்களை ஆண்ட, மணிமுடிதாரியோ, மங்கைகளின் காத்திலுள்ள மதுக்கிண்ணத்தையும், மதவாதியின் கையிலிருந்த 'வேதப்' புத்தகத்தையும் போற்றிக் கிடந்தான். வீணுன, போர்கள்! அர்த்தமில்லாத சண்டைகள்! உழைத்து மடியும் மனிதன், செத்துக்கொண்டிருந்தான். ஏன், இது? இந்நிலையேன்?' என்ற கேள்விகள், ஏழைகளின் இதயங்களிலே், பரவிக்கொண்டிருந்தன. கார்ல் மார்க்ஸின் எண்ணங்கள், ஏழைகளின் இதயங்களை நோக்கிப் படையெடுத்துக் கொண்டிருந்தன. இக்கைய சூழ்நிலையில்தான், ஸ்டாலின் அரசியலில் புகுந்தார்! பள்ளிப்படிப்பை முடித்த ஸ்டாலினுக்கு, அப்போது வயது 15. அந்த நேரத்தில்தான், ரஷ்ய சிம்மாசனத்தின் கடைசி அதிபதியான, இரண்டாவது நிகோலஸ் பட்டமேறினுன். அதிருப்தியும், சோகமும் மக்கள் மன்றத்தில் மண்டிக்கிடந்தன. அதை அறிந்தானில்லை, ஜார் — இரண்டாவது நிகோலஸ். பிரபுக்களின் கைலாகுகளிலும், ரஸ்புடீன் போன்ற ரசாபாச மதகுருமார்களிடையிலும், காலத்தைக் கழித்துக்கொண்டிருந்தான். ஒரு பக்கம் ஏழ்மைமற்றோர் பக்கம் அதைப்பற்றிச் சிந்தனையில்லாத மன்னன்!! — இந்த வேதனையான சூழ்நிலையில்தான் லெனினும் அவரது சகாக்களும், 'புதுவழி'யில் புகமுனைந்தனர் அவ்வழி, வாலிப ஸ்டாலினை, வசீகரித்தது—வளர்த்தது பிறகு, வாகை சூடச்செய்தது.

15 வயது முதல் 'அவ்வழி' சென்ற ஸ்டாலின், தாங்கவேண்டியிருந்த அதிகார அம்புகள், ஏராளம்-ஏழைகளுக்காகப் பாடுபடக்கிளம்பியோரை, நடமாடவிடுவரா, ஆதிக்கப்புரியினர்? எத்தனையோ முறை கைது! தேசப்பிரஷ்டம்! — லெனினும் அவரது தோழர்களும், அனுபவித்தனர். அவ்வளவு துயரங்களையும் தாங்கிக்கொண்டு, பாட்டாளிகளின் மத்தியிலே பலத்தைத்திரட்டினர், 'போல்ஷிவிக்'குகள். இவ்விதம் நாடு முழுமையும் இந்த இயக்கம் வளர்ந்தபோது, அதற்குப் பெருமுயற்சி எடுத்துக்கொண்டு, பாடுபட்ட பலரில் ஸ்டாலின் முக்கியத்துவம் பெற்றார்.

இவர், இந்த இயக்கத்தோடு தொடர்பு கொண்ட 16-வது வயதில் (1895) தான், லெனின், முதல் தொழிலாளர் சங்கத்தை, செயிண்ட் பீடர்ஸ் பர்க் எனுமிடத்தில் நிறுவினர். மார்க்சீய சீடர்களை, ஜாரின் ரஷ்யா வதைக்கத் தவறவில்லை. எனினும், அவர்கள் இரகசியமாக மார்க்சீய போதனைகளைச் செய்து வந்தார்கள். அவர்களில் ஒருவராக ஆன ஸ்டாலின், அறிவை வளர்த்துக் கொள்ள அரும்பாடு பட்டார்—'கேபிடல்', 'கம்யூனிஸ்டு மானிவேஸ்டோ' முதலிய மார்க்சீய நூல்களை, மனப்பாடம் செய்தார். வேதாந்தம், அரசியல் பொருளாதாரம், விஞ்ஞானம், சரிதம் முதலிய பல துறை நூல்களையும் படித்து ஆராய்ந்தார். பொதுவாழ்வுத் துறையில் புகுந்தோர், மக்களைப் பாதிக்கும், எல்லாப் பிரச்னைகளையும், கற்று ஆராய வேண்டுமென்பது அவரது, சித்தாந்தமாகும். 'புதுவழி' புகுந்த அவர், புலிபோலப் பாய்ந்து, சிறிதும் சோர்வின்றி, உழைத்தார்! லெனின், கவனத்தைக் கவர்ந்தார் —பத்திரிகைகளை நடத்தினர்—பல 'ஸ்டிரை'க்குகளை ஏற்பாடு செய்தார்—தம்மை எதிர்த்து வீழ்த்த முற்பட்ட மிதவாதக் கட்சியினரோடும் போராடினர். பலமுறை சர்க்காரின் 'கைது'க்கு உள்ளாகி, தேசப்பிரஷ்டம் செய்யப் பட்டார். இவ்விதம், தியாகத் தழும்புகளை அவர் போன்ற பலர், ஏற்றுக் கொண்டதின் விளைவாகவே 1917 புரட்சி வெற்றி பெற்றது! வீழ்ந்தான், ஜார்!! புதுயுகம், மலர்ந்தது — புதுவாழ்வு உதயமாயிற்று.

எவ்வளவோ, கஷ்டநஷ்டங்களுக்கு மத்தியில் உருவான புதுவாழ்வைக் கட்டிக் காக்கும் பொறுப்பு, மிகப்பெரியதாக உருவெடுத்தது! லெனினும், ஸ்டாலினும், ட்ராட்ஸ்கி போன்றோரும் அரும்பாடுபட்டு, 'சோவியத்' ஆட்சியை நடைமுறைக்குக் கொண்டு வந்தனர். அதுமுதல், லெனின் மறைந்ததிலிருந்து, (1925), 'புதுயுகத்தை' போற்றி வளர்க்க வேண்டியவரானர். ஏழ்மையும் மூடநம்பிக்கையும் பரவிக்கிடந்த ரஷ்ய பூமியைச் சீர்திருத்த ஸ்டாலின் வகுத்த 'ஐந்தாண்டு' திட்டமும் அதை நிறைவேற்ற அவர் எடுத்துக் கொள்ள வேண்டியிருந்த முயற்சிகளும் ஏராளம்.

எல்லோரும் மனிதர்!
பேதமேது? பிளவேது?
எல்லோரும் வாழவேண்டும்!

இந்த முழக்கங்களோடு உருவான, பாட்டாளிகளின் ராஜ்யத்தைக் கண்ட, வெளிநாடுகள் மிரண்டன. ஜெர்மன் சீறிற்று! பிரிட்டன் கொதித்தது! பிரான்சும் அமெரிக்காவும் துடித்தன! ஜப்பான், சங்கநாதம் செய்தது! உதவாதீர், ரஷ்யாவுக்கு!'—என்று அவைகள் ஒன்றுகூடி, ரஷ்யபூமியை விரோதிக்க ஆரம்பித்தன.

புதிய அரசு! புதிய சமூக திட்டத்தை அமுல் நடத்த வேண்டும்!—சிக்கலான நிலை. எனினும், சிந்தை குலையவில்லை- பரந்து கிடந்த சோவியத் பிரதேசங்களை இணைத்து சோவியத் யூனியனுக ஆக்கினர். தனது பூமி, பிறரோடு போட்டியிடவேண்டுமென்றால், தன் நாட்டின் பொருளாதாரம் சரியாக இருக்க வேண்டுவது, அவசியமென உணர்ந்தார். அதற்கு, தொழில் வளம் ஏற்படவேண்டும். இயந்திரங்களோ, வெளிநாட்டார்வசம்! என் செய்வது? புதுப்புது இயந்திரங்கள்! புதுப்புது ஆலைகள்!—யாவும் கட்டப்பட்டன. அவைகளுக்குத் தேவையான இரும்பும், இன்னபிற சுரங்கப் பொருள்களும், தோண்டி எடுக்கப்பட்டன. இந்த முயற்சிகளைக் கண்ட வெளிநாடுகள் கதவுகளை மூடிக்கொண்டன. தயங்கவில்லை, தீரன்! தனது மக்களின் சக்தியையும், ஆர்வத்தையும் பெருக்கினர். பழமை படர்ந்திருந்த விவசாயத் துறையில், விஞ்ஞான முறைகளை ஊக்குவித்தார். ஏர் கலப்பை போயிற்று! 'டிராக்டர்' வந்தது!! சின்னஞ்சிறு கழனிகள் ஒழிந்தன! கூட்டுப் பண்ணைமுறை வந்தது! வயல்களை வளமாக்க, நீர்ப்பாசனத் திட்டங்கள் வகுக்கப்பட்டன!—பாலை, சோலையாயிற்று! வெளிநாடுகள் கண்டு மிரளத்தக்க அளவில் பெரியதோர் பூமியாக, ஏழைரஷ்யா உருவாயிற்று!! இன்று பெருமிதத்தோடு, உலகமேடையில் காட்சியளிக்கிறது.

இந்த வளர்ச்சியைக் கண்ட முதலாளித்துவ நாடுகள் ரஷ்யாவை ஒழித்துவிடவேண்டுமெனக் கங்கணம் கட்டினர். அதன் விளைவாகத்தான்; கடந்த உலகப் பெரும்போர் ஏற்பட்டது. ஹிட்லர், மாஸ்கோவின் கதவைத் தட்டினன்! மருளவில்லை, ஸ்டாலின்!! ரஷ்ய மக்கள், தீரத்தோடு நின்று வெற்றிபெற்றனர். அப்போது, ஸ்டாலின் கையாண்ட ராஜதந்திரம் தான் ரஷ்யாவைக் காப்பாற்றிற்று. அந்த உலகப் போரில், எதிரிகளைக் கண்டு அஞ்சுமளவுக்கு, ரஷ்யா நடந்துகொண்டது. போருக்குப் பிறகும், தனது நஷ்டங்களைச் சமாளித்துக்கொண்டு, பெருமிதமாக நிற்கிறது!!

*

காட்டில், மலர்த் தோட்டம் அமைத்த மாவீரர், அவர்! அவர் போய்விட்டார். அத்தகைய மேதையை, இனிக் காண்பது அரிது. ஏழைக் குடியிலே பிறந்து, ஏழைகளுக்காகப் போராடி, ஏழைகள் வாழ்வை நிமிர்த்தி, இன்பங் கண்ட மாவீரர், போய்விட்டார்!—அவரது வாழ்வு, ஒரு பொன்னூல். அவர் ஏற்றிவைத்த விளக்கு, அணையாதது!

அந்த 'ஜோதி'யை இழந்ததால், ரஷ்ய மக்கள் கண்ணீர் வடிக்கிறார்கள்—உலக மக்கள், பெருமூச்சுவிடுகிறார்கள் — புதுமை விரும்பிகள், துடிக்கிறார்கள். இவை எதுவும், இனி, ஸ்டாலினைத் தந்துவிடப் போவதில்லை! எனவே, அவர் ஏற்றிவைத்த 'ஜோதி'யினைப் பாதுகாக்க அறிஞர்கள் பாடுபடவேண்டும். அவ்விதம் பாடுபடக்கூடிய அறிஞர்களையும், அவர், ரஷ்ய மண்ணுக்கு, உண்டாக்கித் தந்திருக்கிறார். எனவே, ரஷ்ய மக்கள் அஞ்சவேண்டியதில்லை—ரஷ்யமணம், எவராலும் கொள்ளைகொள்ளாதபடி வீசும் —வீசும்.

ஆனால், ஸ்டாலின் அவர்களது வாழ்க்கையை, புதுயுகம் அமைக்கப் போராடிக்கொண்டிருக்கும், நம் போன்ற ஒவ்வொரு தொண்டரும், உள்ளத்தில் கொள்ளவேண்டும்.

'ஸ்டாலின்!' — இந்தச் சொல், இனி, ரஷ்யாவைக் கட்டிக்காக்கும். கடந்த போரின் போது, இந்தச் சொல்லை உச்சரித்தபடிதான், ரஷ்யக் காளைகள் போர்க் களம் புகுந்தனர். கரத்திலே துப்பாக்கி! உதட்டிலே, இந்தச் சொல்!! ஆலைகளின் இயந்திரங்கள் ஓடும்போதும், அது தயாரிக்கும் பொருள்களை நகர்த்தும் போதும், ஒவ்வொரு ரஷியத் தொழிலாளரும், 'ஸ்டாலினை' எண்ணிக்கொண்டே, பணிபுரிவராம். விவசாயிகள் வீடுகள், தொழிலாளர்கள் இல்லங்கள், எங்கும் 'ஸ்டாலின்'! அவரால் அளிக்கப்பட்டு வந்த 'ஸ்டாலின் பரிசினை'ப் பெற, போட்டியிட்டு உழைக்கும் உழைப்பாளரின் முயற்சிகள் விதவிதமானவை! அந்தளவுக்கு, ரஷ்ய மக்களின், கருத்திலே நிலைத்து விட்டார்.

இன்பம் தந்தார்! இதயத்தில் நிலைத்தார்!!

ஸ்டாலினுக்கு, இளைஞருலகின் மீது, அளவிலா பற்றுதல் உண்டு. 'அவர்களே புதுயுகச் சிற்பிகள்!', என்பது அவர் கருத்தாகும். அத்தகைய புதுயுகத்தைச் சமைக்கும் திருப்பணியில் ஈடுபட்டிருக்கும் தோழர்காள்! வாலிப வீரர்காள்!! மாவீரர் ஸ்டாலின், அவரது தலைவன் லெனின் அமர்ந்திருக்கும் 'சமாதி'க் கருகில் போய்விட்டார். லெனினை, எந்த இழுப்பு நோய் தாக்கியதோ, அதே நோய் இவரையும் தாக்கியது! இழுத்துச் சென்றுவிட்டது, லெனின் அருகில்!! செஞ்சதுக்கம், இருவீரர்களின், உறைவிடமாகி விட்டது. அந்த இரு மாவீரர்களும் வகுத்த பாதையில் செல்லும், தீரமிகு தோழர்காள்! ஸ்டாலினைப் போன்ற, உள்ள உரமும், எதையும் நன்றாக உணரும் அறிவும், பகுத்துப்பார்க்கும் இதயமும், நல்லெண்ணமும், மக்களில் ஒருவனாகக்கருதிப் பழகும் தன்மையும், பொது வாழ்க்கையில் இன்றியமையாதவை என்பதை ஒரு முறை, நினைவூட்டிக்கொள்ளுங்கள்.

ஒருபோது வெளியுலகால், கேலி செய்யப்பட்ட ரஷ்யா—இன்று முரசுகொட்டும், நிலைக்கு வளர்ந்தது, யாரால்? மேற் சொன்ன பண்புகள் கொண்ட ஸ்டாலின் பெருந்தகையால்! அந்த மாவீரர், இந்த குணநிசயங்களை மட்டுமல்ல, பெற்றிருந்தது. கொள்கைக்காகத் தன் வாழ்வையும் தத்தம் செய்யத் தயங்கியதில்லை — தியாகத் தழும்புகள், ஏராளம் ஏற்றிருக்கிறார்.

இன்று, அவர், உலகத்தின் அணையா விளக்கு! அன்றோ?—தினசரி விரட்டப்பட்டார், ஜாரின் கொடுமையால். ஏழுமுறை கைது! ஆறுமுறை தேசப்பிரஷ்டம்! பலமுறை, ஒழித்துவிடச்சதி!—இத்தனையையும் தாங்கினர், தனது கொள்கைகளுக்காக.

இடுக்கண்வந்தபோது, அஞ்சவில்லை!

பிறருக்கு துயரம் தரவும் விரும்பியதில்லை! அந்த தீரரின், வாழ்நாள் முடிந்துவிட்டது. அவரது, அன்புருவுக்கு, ஒவ்வோர் நாட்டிலுமுள்ள சர்க்கார் பிரதிநிதிகள் இட்டனராம் — படங்களுக்கு மரியாதை செய்தனராம்.

நாமோ, 'நமக்கென' ஒரு 'சர்க்கார்' இல்லாதவர்கள்! எனவே, 'நமது' பிரதிநிதி, மாஸ்கோவில் இருக்கும் வாய்ப்பு பெறாதவர்கள்!! எனினும், அவரது அன்புருவம் நமது இதயங்களில், பதிந்து கிடக்கிறது. அதற்கு நம், மரியாதையைச் செலுத்திக்கொள்வோம் — அவர் காட்டிய பாதையில் நடப்பதன் மூலம். வாழ்க, ஸ்டாலின்! வளர்க அவர்தம் கொள்கைகள்!!

ஒரு பேரிடி

[திராவிட மாணவர் முன்னேற்றக்கழக பொதுச் செயலாளர் தோழர் கே. எ. மதியழகன் விடுத்திருக்கும் அறிக்கை:—]

மாவீரர் ஸ்டாலின் அவர்களது மறைவு உலகப் பாட்டாளி மக்கள் அனைவருக்குமே பேரிடி போன்ற துயரச் சேதியாகும். ஸ்டாலின் அவர்களது மரணத்தால் உலகம் ஒப்பற்ற ஓர் தலைவனை இழந்துவிட்டது. அவரது மறைவு ரஷ்ய நாட்டு மக்களுக்கு மட்டுமின்றி உலக மக்களுக்கே ஒரு பெரு நஷ்டமாகும். வறுமைத் தேள் கொட்டும் சாதாரண ஏழைக் குடும்பத்தில் தோன்றிய ஸ்டாலின் வையகத்திலேயே வறுமையை வேரறுக்கும் புனிதக் கொள்கைக்காக தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தார். பிற்போக்குத் தன்மையின் உறைவிடமாய்—குலாக்குகளின் கொடுமைக் கூடாரமாய்—இம்மென்றால் சிறைவாசம், ஏனென்றால் சைபீரிய வனவாசம் என்று இருந்த ரஷ்ய நாட்டை, ஜாரின் அடக்கு முறை தர்பாரிலிருந்து விடுவித்து, உழைப்பாளிகள் நாடாளும் உரிமை பெற்றவர் என்ற நிலைமையை அக்டோபர் புரட்சியின் மூலம் லெனின் அமைத்துத் தந்தார் என்றால், அப்படிப்பட்ட விடுதலை அரசில், பாட்டாளிகளின் 'வேதனையையும்', 'விம்மலையும்' போக்கி, விமோசனத்தை ஏற்

(அடுத்த பக்கம் பார்க்க)

1-ம் பக்கத் தொடர்ச்சி

வழி செய்யும் விஞ்ஞானி இருக்கிறார், அவர் கண்ணோட்டம் வறுமையை ஒழிக்குமாம, அவர் திட்டம் நமது வாட்டத்தைத் துடைக்குமாம்,

வடக்கே ருஷிய நாடோன்றிருக்குதாம்
அங்கு, வாழ்கின்றார், ஸ்டாலின், நம் மாமருந்து,

என்று சிந்து பாடுகிறார்கள் என்றால், அந்த மாவீரனுடைய செல்வாக்கு எத்தகையது!

ஸ்டாலின்! ஒரு இலட்சியச் சொல்லாக மாறிவிட்ட மாண்பு, மானிலத்திலே புதுமையானதோர் நிகழ்ச்சி. எங்கோ ஒரு நாட்டிலே ஒரு கட்சி—அந்தக் கட்சிக்குத் தலைவன் என்ற நிலை—ஆனால் அந்த நிலை பெற்றவர்கள் உலகிலே, பல்வேறு நாடுகளிலேயும் உண்டு, மலான் ஓர் கட்சித்தலைவர்தான், சேனநாயகரும் அதுபோலவே, சர்ச்சில் இன்னொருவர், மற்றும் பலருளர்—ஸ்டாலின், அதுபோலத்தான் ஒரு கட்சியின் தலைவர்—ஆனால், கட்சித் தலைவர் நாட்டின் தலைவரானார், நாட்டின் தலைவர் மட்டுமல்ல, உலக வழிகாட்டியுமானார். சொந்த நாட்டிலே அவருடைய கண் காட்டிய வழி செல்வதைப் பெருமைக்குரியதாகக் கொண்டவர்கள் இருப்பது மட்டுமா, எந்த நாட்டிலும், அவர் காட்டும் வழியே நல்வழி என்று கொள்பவர்கள் ஏராளம்—அந்தத் தொகை வளர்ந்தவண்ணமும் இருந்திடக் காண்கிறோம். அவர் காட்டும் வழி செல்வோம் என்று கூறிப் பயணத்தைத் தொடங்குவோர் அவர் காட்டிய வழி செல்ல. வகைகாண வேண்டும் முதலில் என்று கூறுவோர், அவர் காட்டும் வழிசெல்லச் செய்வோம், வழி தவறியோரையும் என்று சொல்வோர் —என இவ்வண்ணம் சிலபல முறை மாற்றங்கள் தென்படுகின்றனவே தவிற, பொதுவாகப் பார்க்கும்போது, அவர் காட்டிய வழியே நல்வழி என்று கருதுவோரின் தொகை எங்கும் வளர்ந்தவண்ணம் இருக்கிறது—இது உண்மை—வெறும் புகழ்ச்சியில்லை—இதனை உணராதார் ஏதும், உணராதாரே! எனவேதான், ஸ்டாலின் மறைவு கேட்டு, ஏழை அழுகிறான், எங்கும்—எந்த நிறத்தானும்—எந்த நாட்டவனும்! இங்ஙனம் உலகில் உள்ள உழைப்பாளர் உள்ளங்களைத் தொட்டுவிட்ட பெருமைக்குரியவர், ஸ்டாலின். அவரன்றோ மறைந்து போனார்.

*

உலகிலேயே மிகக்கொடுமையான கொடுங்கோன்மையை எதிர்க்கும்நிலை ஸ்டாலினுக்கு ஏற்பட்டது—அரும்பு மீசைப் பருவத்திலேயே, கொடுங்கோலன் என்றசொல்லுக்கும் ஜார் என்ற சொல்லுக்கும் மாறுபாடு இல்லா வண்ணம் செய்த மகோன்மத்தன் மன்னன்—கபட சந்யாசி ரஸ்புடீன் அவனுக்கு குரு—ஏழையின் இரத்தத்தைக் குடிக்கும் மனிதமிருகங்கள் கொலுமண்டபத்தில்—மாளிகைகளிலே களியாட்டம வெறியாட்டம்—வெளியே கடும்பனி, அதிலே விறைத்துச் சாகும் ஏழைகள்! இது ரஷ்யா! சீமாட்டிகள் சிரிப்பொலி, வளையொலி, அலங்கார மாளிகைகளில்! காசம், குன்மம், கைகால்முடக்கு, இது வெளியே, வறுமையாளர்களிடம். இவர்கள், வேலை, வேலை, என்று உழல்வர், பிணமாகும்போதுதான் ஓய்வு—இடையே வரி செலுத்துவர்—அந்த வரிப்பணம்தான் மதுக்கிண்ணமாக, ஆசைக்கிளியே! என்று அவனும், ஆஹா! ஆருயிரே! என்று அவளும், கொஞ்சிக்குலாவும் பஞ்சணையாக, தோட்டாவாக, துப்பாக்கியாக, யாழாக, பேழையாக, மாறும். இது ரஷ்யா!

ஓடப்பர்—மிகப் பெரும்பாலோர்! உயரப்பர் — மிகச் சிலர்! அவர்களுக்கு ஞானபிதா, ஒரு கபடன்! இந்த ரஷ்யாவிலே, ஸ்டாலின்! பேழையிலே, பொன், பொருள்—பேழைக்குடையார் உள்ளமோ பாம்புப்புற்று! ஏழையோ, அழவும் அறியாதவன்! அடிபணிவான், ஆண்டை பார்க்காமலிருப்பினும்! அவர்கள் சார்பிலே வாதிட, போரிட, லெனின் — முன்வந்தார்—அவருக்கு வலக்கரமானார் ஸ்டாலின்.

*

பாசறைகள் அமைக்கும் பொறுப்பாளர்-பரணி தரும் பாவலன்—புதிய எண்ணம் தரும் பேச்சாளர் — புதுமைக் கருத்தளிக்கும் எழுத்தாளர்—புதிய படைவரிசைகளை அமைக்கும் படைவீரர்-அணிவகுப்புகளை நடத்திச் செல்லும் தளபதி — எல்லாமானார்! எங்கும் புயலெனச் சுற்றினார்—நெருப்பு என்றனர் உல்லாசபுரியினர்-நிலவு என்றனர் ஏழையர்-கடும்விஷம் என்றனர் கனதனவான்கள், அருமருந்து என்றனர், ஏழைஎளியோர்-என் வாரிசு என்றான் லெனின்.

*

ஓடப்பர், உயரப்பர் எல்லாம்மாறி, ஒப்பப்பர் ஆயினர் ரஷ்ய மக்கள்! நாடு, இனி வேட்டைக்காடு அல்ல, என்று அறிவித்தார் லெனின் — தலைவா! இதுபோல, பாரெங்கும் பூக்காடு மணம் கமழச்செய்யும் பணியில், என்னை ஈடுபடப்பணியுங்கள் என்றார் ஸ்டாலின். புதியதோர் உலகு செய்வோம் என்றார், லெனின்! ஸ்டாலின் அவர்பக்கம் நின்றார், உலகு கண்களை அகலத்திறந்து நோக்கிற்று. உலுத்தர் உறுமினர் — பயணம் நிற்கவில்லை.

சதிகாரர் கிளம்பினர்—வெற்றி பெறமுடியவில்லை! வெள்ளை ரஷ்யா, சிகப்பாயிற்று—அந்தச் செந்நிறத்தைக் காக்கும் செம்படை திறம்படநின்றது—அதனை நடத்திச் செல்லச் செம்மல், ஸ்டாலின் நின்றார்!

லெனின், ஒளிவிளக்கை, ஸ்டாலின் ஏந்தினர்—லெனின் மறைந்தார் —ஸ்டாலினிடம் இலட்சியத்தை ஒப்படைத்தார்.

உலகிலே உருட்டு விழியினர் ஒன்று கூடினர், புத்தம் புதுப் பூங்காவை அழிக்க — ஸ்டாலின் கண்ணொளி காதகர்களின் திட்டத்தைக் கருகிடச் செய்தது. சோவியத் ஆட்சியின் சோபிதத்தை உலகறியச் செய்தல வேண்டும், இந்த ஓவியத்தைக் கண்டு, உலகு புது வழியில் புகவேண்டும், என்பது ஸ்டாலின் கொண்ட கோட்பாடு! அதற்கு எதிர்ப்பு, எந்தத் திக்கிலிருந்து கிளம்பினாலும், என்ன உருவிலே வந்தாலும், சீறிடும் வெறியனாக வரினும், சிரித்திடும் ராஜதந்திரியாக வரினும். ஜெபமாலை கொண்ட மதவாதி உருவிலே வரினும், ஜனநாயகம் பேசும் போலி உருவிலே வரினும், ஸ்டாலின் அவர்களை வென்றார்—சோவியத் ஆட்சியைச் சோபிதமான தாக்கினார்.

*

இல்லாமை இல்லா நாடு! பூலோகசுவர்க்கம்! இன்பபுரி! பாட்டாளி அரசு! பொது உடைமை பூமி! — அர்ச்சனை வளர்ந்தது — அருளையும் வளர்ந்தது—ஸ்டாலின், புகழுரையால் மயங்காமல், பொல்லாங்கு கண்டறியத் தயங்காமல், தொட்டிலருகே அன்புடன் இருந்திடும் தாயானார்—சமதர்மக் குழவி வளர்ந்தது

*

உலக ஜனநாயகத்துக்கே உலை வைப்பேன் என்று உறுமிய ஹிட்லர் மூலம், புது முறைக்குப் பேராபத்து ஏற்பட்டபோது, ஸ்டாலின், உலக மாவீரர்கள் காட்டிய வீரதீரம் அனைத்தையும் ஒரு ருவாகக்கொண்ட தீரனாகக் கிளம்பினார்—பெர்லின் வீழ்ந்தது-பேபாசு சாய்ந்தது

உலகுக்கு ஓர் நற்பணி புரிந்தான் உத்தமன் என்று, சிரிப்பு கண்டாலே சீறும் 'சீலர்களும்' புகழ்ந்தனர், அதுபோது.

*

பாட்டாளி அரசாம், பாட்டாளி அரசு!—எங்கே என்ன உண்டு—எழில் உண்டா, கலை உண்டா, தொழில் உண்டா, திறம் உண்டா, நுண்ணறிவுண்டா, நூல் உண்டா, விஞ்ஞானம் உண்டா, வியக்கத்தகும் பொருள் உண்டா, சோறு உண்டாம் ஏழைக்கு, பாடு உண்டாம் அனைவர்க்கும், என்று சமதர்ம விரோதிகள் பிரச்சாரம் செய்வது அறிந்த ஸ்டாலின், ரஷ்ய நாட்டிலே புது ஆட்சி முறை, சோவியத் ஆட்சி முறை, எவ்வளவு அற்புதமான மாறுதலை ஏற்படுத்தி இருக்கிறது என்பதைச் சொல்லாலா—இல்லை, இல்லை, செயலில் காட்டினார்: மாபெரும் நீர்த்தேக்கங்கள்—அற்புதமான அணைக்கட்டுகள்—விஞ்ஞான முறைப்படி விவசாயம்—முதலாளித்துவம் புகாத தொழிற்சாலைகள்—விஞ்ஞானக்கூடங்கள், அஞ்ஞானத்தை விரட்டும் கலைஞான மாடங்கள், கல்லூரிகள், மருத்துவமனைகள், ஓய்விடங்கள்,—என ஒவ்வொரு துறையிலும், உயர்தரமான வெற்றிகளைக் கண்டார்! கடும்பனி, கொட்டும் குளிர், போன்ற இயற்கையின் கொடுமைகளைக்கூட கட்டுப்படுத்திடமுடியும் என்பதைக் காட்டினார்.

*

ஜாருக்கு எதிராகப் படைகளை நடத்திச் சென்ற தலைவன், காடு கரம்புகளைக் கழனிகளாக்கும் உழவர் படைக்கும்தலைவனானான்! பாட்டாளிகள் ஜாரின் மாளிகையைத் தூள்தூளாக்கிடத் துடித்ததைக் கண்டு களித்த தலைவன், காட்டாறுகள் கட்டுப்படுத்தப்பட்டதையும், வயல்களிலே சூல்கொண்ட மங்கைபோல் தலை சாய்த்து நிற்கும் பயிர்களையும், கிராமங்களிலே களிப்பையும், நகரங்களிலே நேர்த்தியையும், எங்கும் எழிலையும், எவர் வாழ்க்கையிலும், நிம்மதியையும், கண்டு பெருமிதம் கொண்டான். அண்மையிலே வெளிவந்த அவருடைய உருவப்படத்தைக் கண்டால், அவருடைய நெஞ்சிலே இருந்த களிப்பு, விளங்கும். பார்வையிலே ஓர் கெம்பீரம், கண்களிலே வெற்றி ஒளி, இவை தெரியும்-நிலைமை புரியும்.

*

ஸ்டாலின்!—புது வாழ்வு தந்த பெரியார்—அவர் இதுபோது கொண்டிருந்த எண்ணம், நிறை வேறி இருக்குமானால், இதுவரை அவர் சாதித்தவைகள் எல்லாவற்றுக்கும் சிகரம்போல் அமைந்திருக்கும்—அது தான் போரற்ற, பொச்சரிப்பு அற்ற, பொல்லாங்கு நினைப்பற்ற, உலக சமாதானம்—இதற்கான எண்ணம், ஏற்பாடு, இவைகளிலே ஈடுபட்டிருந்த வேளையில். மறைந்தார். வட்டமிடும் வல்லூறும், வலைவீசும் வேடனும், கணைவிடும் காதகனும் இல்லை என்ற நிலையில், வான்வெளி நோக்கி, அழகாகப்பறக்கும் வெண்புறுபோல், மனித சமுதாயம், இன்ப வாழ்வில் நீந்திடவேண்டும் என்ற எண்ணம் கொண்ட ஈடில்லாத் தலைவன், இறந்துபட்டான்—உலகின் உயர்வுக்குப் பாடுபட்டு வந்த உத்தமன் மறைந்துவிட்டான்—ஒளிவிளக்கு அணைந்தது—ஓயாதுழைத்த உயர் தனிச் செம்மல், இறந்து பட்டார்—அந்தோ! கொடுமை! கொடுமை!!

*

ஆறாத்துயர்கொண்ட மக்கள்—அவனியில் பல்வேறு நாடுகளிலும் உள்ள பாட்டாளித் தோழர்கள், பரதவிக்கிறார்கள். துடைத்திட எளிதல்ல—மறந்திடச் சாத்தியமில்லை—மனநிலை சுலபத்தில் மாறவும் செய்யாது. மாபெருந்தலைவர்! மனிதகுலத்துக்கு உய்வும் உயர்வும் அளித்தவர் மறைந்தார்—ஏழையர் உலகு தன்வழிகாட்டியை இழந்துவிட்டது. என் செய்வது.

திராவிட முன்னேற்றக் கழகம், இந்த மகத்தான இழப்புகண்டு ஆழ்ந்த துக்கம் கொள்ளுகிறது. மறைந்த மாவீரனுடைய மாண்புகளை மறவாமல் இருப்பதும், அவர் காட்டிச்சென்ற அரிய கொள்கைக்காக தன் ஆற்றலைப பயன்படுத்துவதும்தான், மறைந்த பெரியாருக்குக் காட்டும் உயர் தனிச்சிறப்புடைக் காணிக்கை என்ற முறையில். அவர் அளித்த அரியபெரிய கருத்துக்களுக்காகத் திராவிட முன்னேற்றக் கழகம் தளராது உழைக்கும், என்ற உறுதியை, இந்த மகத்தான சோகச் சம்பவம் நமக்கெல்லாம் தருவதாக அமையட்டும். ஸ்டாலின் மறைந்தார் — அவர் புகழும், கொள்கையும் மறையாது — நாமெல்லாம் மறைந்த மாவீரரின், பின்சந்ததிகள் என்ற முறையில், பொதுப்பணியில் ஈடுபடுவோமாக. நாடு பொன்னாடு ஆகவும், எல்லோரும் வாழவும், ஏற்புடையதோர் ஆட்சிமுறை அமையவுமான அறநெறியில் அயராமல் உழைப்பதுதான் ஸ்டாலின் வழி செல்வதாகும். ஸ்டாலின் மறைந்தார் — ஆனால் அவர் வகுத்த பாதை, தெள்ளத் தெளியத் தெரிகிறது. வாரீர், அவர் வகுத்த வழி நடப்போம்.

அண்ணாதுரை.
பொதுச் செயலாளர்,
திராவிட முன்னேற்றக் கழகம்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

படுத்திய பெருமை ஸ்டாலினையே சாரும். கொண்டிருந்த கொள்கைக்காக அவர் அனுபவித்த சிறைவாசமும், தேசப் பிரஷ்டமும், அவரது குன்றாத இலட்சியப் பற்றினை உலகுக்கு ஒலிபெருக்கும் இலக்கியமாகும். அடக்கு முறை தாக்கத் தாக்க தணலிலேவெந்ததங்கமானார், ஸ்டாலின். அந்தத் தங்கம் தரணி முழுவதும் கொடுமையையும், வறுமையையும் ஒழிக்கப்பட்டு அமைதி அரசோச்ச வேண்டும் என்பதற்காகப் போராடினார் தனது கடைசி மூச்சு வரையிலே.

அத்தகைய உத்தமரை சாவு நம்மிடமிருந்து பிரித்து விட்டது. இந்த ஈடு செய்ய முடியாத நஷ்டம் நிரப்பப்படுமோ என்பது சந்தேகந்தான்.

புது வாழ்வுக்காக அவரது போதனைகள் நமக்கு வழிகாட்டட்டும். அவரை இழந்து தவிக்கும் ரஷ்யப் பெருங்குடி மக்களுக்கும், மற்றவருக்கும், திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.